# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 138/2018**

பெயர் : **ராஜேந்திரன்** நாள் : 27.03.2023

வா.சா.1 – பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – ராஜேந்திரன் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடக்க நேரம் 11.30</u>

நான் அசல் வழக்கை பிரதிவாதிகள் அமைதியான சுவாதீனத்திற்கு இடைஞ்சல் செய்யக்கூடாது என்று பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன். நான் 1 ம் பிரதிவாதி பைனான்சில் கடன் வாங்கியுள்ளேன். 3 ம் பிரதிவாதியிடம் எனது வீட்டு சம்பந்தப்பட்ட ஆவணத்தை அடமானமாக வைத்து ரூ.100000 ம் கடன் பெற்றுள்ளேன், அதனால் அவரை 3 ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன். 3 ம் பிரதிவாதியிடம் எப்போது அடமானம் வைத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை. நான் அந்த அடமான பத்திரத்தை வேலவன் ஆட்டோ பைனான்ஸ் பார்ட்னர் மகேந்திரன் என்ற பெயரில்தான் ஏற்படுத்தி கொடுத்துள்ளேன். அடமானத்திற்கான சொத்து கத்தேரி கிராமம் சர்வே எண் 205/1A ல் 720 சதுரடியில் உள்ளது. அதில் 350 சதுரடியில் ஒரு வில்லை வீடு உள்ளது.

2) நான் பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தத்தின்படி 2 ம் பிரதிவாதியிடமிருந்து ரூ.150000 ம் கடனாக பெற்றேன். அந்த பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தத்தின் அசல் ஆவணம் 2 ம் பிரதிவாதியிடம் உள்ளது. 2 ம் பிரதிவாதியிடம் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஒப்பந்தத்திலும், 3 ம் பிரதிவாதியிடம் வைக்கப்பட்ட அடமான சொத்தைதான் குறிப்பிட்டுள்ளேன். அடமான பத்திரமும், பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த ஆவணமும் ஒரே தேதியில் ஏற்படுத்தி கொடுத்தேனா என்று சரியாக ஞாபகமில்லை. மேற்படி அடமான பத்திரம் மற்றும் பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த ஆவணத்தின்படி பெற்ற கடன்களில் சுமார் ரூ.150000 ம் வரை திரும்ப செலுத்திவிட்டேன். மீதி பணம் பாக்கி உள்ளது. நான் இரண்டு கடன்களுக்கும் சேர்த்துதான் ரூ.150000 ம் செலுத்தியுள்ளேன். நான்

ரூ.150000 ம் செலுத்தியுள்ளேன் என்பதற்கு ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் மீதி கடன் தொகையை திருப்பி கொடுக்க தயாராக உள்ளேன்.

3) பிரதிவாதிகள் என்னிடமிருந்து கூடுதலாக வட்டி மற்றும் அபராத வட்டி கேட்டதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். கூடுதல் வட்டி கேட்டதற்கும், அபராத வட்டி கேட்டதற்கும் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக பொய்யாக ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிட்டு கடன் தொகையை நான் பிரதிவாதிகளிடம் திரும்ப செலுத்தவில்லை. நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பாக கடன் தொகையில் ஒரு பகுதியை செலுத்தினேன். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு 2 மாதங்களுக்கு முன்பாக கடன் தொகையை செலுத்தினேன் என்பதற்கான ரசீதுகள் எதுவும் என்னிடம் இல்லை. நான் கடைசியாக 2015 ம் ஆண்டுதான் கடன் தவணை தொகையை செலுத்தினேன் என்றாலும், அதன் பின்னிட்டு எந்த தவணை தொகையையும் செலுத்த வில்லை என்றாலும், சரியல்ல.

4) நான் கடன் தவணை செலுத்தும்போது பிரதிவாதிகள் அதற்கான ரசீதுகளை கொடுக்கவில்லை. பொதுவாக பைனான்சில் கடன் தவணை செலுத்தினால் அதற்கான ரசீது கொடுப்பது வழக்கம் என்றால், சரிதான். சுமார் 7, 8 தவணை தொகைகளுக்கு பிரதிவாதிகள் எனக்கு ரசீது கொடுக்கவில்லை. அபராதத் தொகையை கட்டினால்தான் ரசீது கொடுப்போம் என்று பிரதிவாதிகள் கூறினார்கள். ரசீது கொடுக்கவில்லையென்றாலும், பணம் கட்டமாட்டேன் என்று நான் கூறினேன். பிரதிவாதிகள் என்னிடம் பணத்தை பெற்றுக்கொண்டு என்னை ஏமாற்ற வேண்டும் என்று ரசீதுகள் கொடுக்கவில்லை. பிரதிவாதிகள் அதிக வட்டி கேட்கிறார்கள் என்பதற்கும், அபராத வட்டி கேட்கிறார்கள் என்பதற்கும், தவணை தொகை செலுத்தும்போது ரசீதுகள் கொடுக்கவில்லை என்பதற்கும் நான் காவல் துறையிடம் புகார் எதுவும் அளிக்கவில்லை, சேலம் மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்துள்ளேன். அந்த புகாரை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்று

ஞாபகமில்லை. நான் அவ்வாறான புகார் எதுவும் கொடுக்கவில்லையென்றாலும், வழக்கிற்காக புகார் கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

5) பிரதிவாதிகள் அதிக வட்டி கேட்கிறார்கள் என்பதற்கும், அபராத வட்டி கேட்கிறார்கள் என்பதற்கும், தவணை தொகை செலுத்தும்போது ரசீதுகள் கொடுக்கவில்லை என்பதற்கும் வழக்கறிஞர் மூலமாக நான் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை.

குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 11.50

ஒப்பம் / ராஜேந்திரன்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.